# யா/ ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை.
# J/ Hartley College, Point Pedro.

## முதலாம் தவணைப் பரீட்சை – 2020 – தரம் 6
## First Term Examination – 2020 – Grade 6

| | | | | |
|---|---|---|---|---|
| குடியியற்கல்வி I, II<br>Civic Education I, II | 15 | T | I, II | இரண்டு மணித்தியாலம்<br>Two Hours |
| சுட்டெண்<br>Index No | | | | குடியியற்கல்வி |

### பகுதி I

**சரியான விடையின்கீழ்க் கோடிடுக.**

1. பாடசாலை பற்றிய வரலாற்றை அறிந்து கொள்ள உதவும் ஒரு ஆவணம்.
   1) இலவச நூல்  3) சம்பவ திரட்டு புத்தகம்
   2) வசதிக்கட்டண பற்றுச் சீட்டு  4) தினவரவு இடாப்பு
2. பேராசிரியர் சேனக பிபிலே அவர்களுக்கு 'தடாபோய்' தங்கப்பதக்கம் எந்தத் துறைக்கு ஆற்றிய சேவைக்காக வழங்கப்பட்டது?
   1) விளையாட்டு  3) விண்வெளி
   2) கல்வி  4) வைத்தியம்
3. தன்னிடமுள்ள பலவீனத்தைக் குறைக்க ஒரு சிறந்த நடவடிக்கை.
   1) அதிகம் படித்தல்  3) நண்பர்களுடன் அதிக நேரம் செலவிடல்
   2) சுயமதிப்பீடு  4) அதிகாலையில் எழும்புதல்
4. ஒருவரது விபரங்கள் முழுவதையும் அறிய உதவுவது.
   1) வகுப்பு ஆசிரியரின் அறிக்கை  3) சுயவிபரக்கோவை
   2) தேர்தல் இடாப்பு  4) பரீட்சைப் பெறுபேற்று அறிக்கை.
5. அழகியல் செயற்பாடுகளில் ஒன்றாக அமைவது.
   1) விவாதம்  3) நடனம்
   2) உயரம் பாய்தல்  4) காய்கறி நடுதல்
6. உங்கள் பெயர் சரியானது என்பதை உறுதி செய்யக் கூடிய ஆவணம்.
   1) பிறப்புச் சான்றிதழ்  3) மாணவர் இடாப்பு
   2) முன்னேற்ற அறிக்கை  4) அதிபர் அறிக்கை
7. கலாநிதி C.W.W கன்னங்கரா பிறந்த ஊரின் பெயர்.
   1) காலி  3) பேருவளை
   2) வெலிக்கம்  4) ரன்தொம்பே
8. ஒருவருடைய பலவீனமாக அமையும் அம்சம்
   1) பணிவு  3) அடக்கம்
   2) பொறாமை  4) மகிழ்ச்சி


kalvi.lk

9. சிரமதானத்தில் ஈடுபடுவதனால் கிடைக்கும் முக்கிய நன்மை
1) புதிய இடங்களுக்கு செல்வும் வாய்ப்பு
2) வேலை அனுபவம் கிடைத்தல்
3) இலவச உணவு கிடைத்தல்
4) சான்றிதழ் கிடைத்தல்

10. பொருட்களை வாங்க கடைக்குச் சென்றவர் பணம் குறைவாக இருந்ததால் அப் பொருளை வாங்க முடியவில்லை. இதற்கு பிரதான காரணம்
1) அவரது காலதாமதம்
2) சரியான திட்டமிடலின்மை
3) உணவுக்கு அதிகபணம் செலவாகியமை
4) விடுமுறைநாளில் சென்றமை

11. பாடசாலையின் நிர்வாகக் கட்டமைப்பில் உயர்மட்டத்தில் இருப்பவர்
1) மாணவன்
2) ஆசிரியர்
3) அதிபர்
4) பகுதித் தலைவர்

12. உமது பாடசாலை அமைந்துள்ள கல்வி வலயம் எது?
1) யாழ்ப்பாணம்
2) வலிகாமம்
3) வடமராட்சி
4) தென்மராட்சி

13. இலங்கையின் தற்போதைய கல்வி அமைச்சர்
1) அகிலவிராஜ் காரியவசம்
2) டளஸ் அழகப்பெரும
3) பந்துல குணவர்த்தன
4) D.S. சேனநாயக்க

14. உமது பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு
1) 1638
2) 1838
3) 1738
4) 1538

15. பாடசாலை ஒழுங்கமைப்பில் இடம்பெறும் குழுக்கள் அல்லாதது
1) சுற்றாடற்குழு
2) ஒழுக்காற்றுக் குழு
3) நலன்புரிக் குழு
4) கிராம அபிவிருத்திக் குழு

16. தனிமனித விருத்திக்கு மட்டுமன்றி சமூக விருத்திக்கும் பங்களிப்பு செய்யும் அமைப்பு
1) பொலிஸ் நிலையம்
2) பாடசாலை
3) நீதிமன்றம்
4) தேவாலயம்

17. பாடசாலை மாணவர்களுக்காக மிக இண்மையில் உருவாக்கப்பட்ட இலவசத்திட்டம்
1) மதிய உணவுத்திட்டம்
2) இலவச நூல் விநியோகம்
3) சுரக்ஷா காப்புறுதித்திட்டம்
4) சிறுவர் சேமிப்புத்திட்டம்

18. பெரும்பாலான பாடசாலைக் கீதங்களில் யாரைப் போற்றி மதிக்கப்படுகின்றது
1) குரு
2) கடவுள்
3) பிள்ளை
4) தாய்

19. உங்கள் பாடசாலை அமைந்துள்ள மாகாணம் எது?
1) தென்மாகாணம்
2) வட
3) கிழக்கு
4) வடமத்திய

20. உங்கள் முகவரி சரியானது என்பதனை உறுதி செய்வது
1) தந்தையிடமிருந்து
2) பாடசாலையிலிருந்து
3) கிராம அதிகாரியிடமிருந்து
4) குடும்ப அங்கத்தவரிடமிருந்து

**($20 \times 1 = 20$ புள்ளிகள்)**


kalvi.lk

## பகுதி – II

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.**

01.

1. பாடசாலையின் வரலாறு என்பதால் கருதப்படுவது யாது?
2. உமது பாடசாலையின் வரலாற்றை அறிய உதவும் மூலாதாரங்கள் 4 தருக.
3. பாடசாலை ஒழுங்கமைப்புக் கட்டமைப்பின் மாதிரியை வரைக.
4. பாடசாலைக்கு நிர்வாக ஒழுங்கமைப்பு ஏன் அவசியம் என்பதற்கு காரணம் தருக.

**(20 புள்ளிகள்)**

02.

1. உங்களிடம் காணப்படும் சிறந்த பண்புகள் 4 தருக.
2. உங்கள் நண்பனிடம் காணப்படும் பலவீனங்கள் 4 தருக.
3. பலவீனங்களை குறைத்துக்கொள்ள பின்பற்ற வேண்டிய நடைமுறைகள 4 தருக.
4. உங்களிடம் காணப்படும் நற்பண்புகளை வெளிப்படுத்திய 4 சந்தர்ப்பங்களை தருக.
5. உங்களது திறமையை வளர்க்க பாடசாலையில் கிடைக்கும் சந்தர்ப்பங்கள் 4 தருக.

**(20 புள்ளிகள்)**

03.

1. பாடசாலை இலச்சினை பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள் 4 தருக.
2. பாடசாலைக்குச் செல்ல திட்டமிடும் போது கவனிக்க வேண்டிய 4 விடயங்களை தருக.
3. பாடசாலையின் தனித்துவத்தை அடையாளப்படுத்தும் இலச்சினைகள் 4 தருக.
4. பாடசாலைக் கொடி ஏற்றப்படும் போது அவதானிக்க வேண்டியவை 4 தருக.
5. பாடசாலையில் நடைபெறும் விழாக்கள் 3 தருக.

**(20 புள்ளிகள்)**

04.

1. திட்டமிடுவதால் ஏற்படும் நன்மைகள் 4 தருக.
2. பாடசாலை சட்ட திட்டங்கள் ஏன் அவசியமானவை என்பதற்கு 4 காரணங்கள் தருக.
3. மாணவர்களுக்கான சட்டதிட்டங்கள் 4 தருக.
4. சிறந்த அதிபரின் கடமைகள் 4 தருக.
5. மாணவர்களின் உரிமைகள் 4 தருக.

**(20 புள்ளிகள்)**

05.

1. பாடசாலை மாணவராகிய உமக்கு ஏற்படும் சவால்கள் 4 தருக.
2. வாழ்க்கையில் முன்னேற நீங்கள் வளர்த்துக் கொள்ள வேண்டியவை 4 தருக.
3. பாடசாலையின் சம்பிரதாயம் என்றால் என்ன? அதற்கு 2 உதாரணம் தருக.
4. உங்கள் பாடசாலையின் இலச்சினையை வரைக.
5. மாணவர்களின் கடமைகள் 4 தருக

**(20 புள்ளிகள்)**



Education கல்வி අධ්‍යාපන
kalvi.lk




Education கல்வி අධ්‍යාපන

KALVI.LK

WHATSAPP
075 287 1457